## 3. என் பேரைசொல்லி அழைத்தவர் நீரே

### பல்லவி

என் பேரை சொல்லி அழைத்தவர் நீரே
என் பேரை மேன்மைபடுத்துவீர் நீரே (2)

### சரணங்கள்

1. யாக்கோபு என்னும் சிறுப்பூச்சியே
பயப்படாதே என்றீர்
இஸ்ரவேலின் சிறுகூட்டமே
திகைத்திடாதே என்றீர்
- என் பேரைசொல்லி

2. உன்னை கொண்டு பெரிய
காரியம் செய்வேன் என்றீர்
பெரிய பெரிய அற்புதங்ளை
காட்டுவேன் என்றீர்
- என் பேரைசொல்லி

3. உன்னை விட்டு விலகாமல்
இருப்பேன் என்றீர்
உன்னை என்றும் கைவிடாமல்
காப்பேன் என்றீர்
- என் பேரைசொல்லி

4. என்னுடைய கிருபை உனக்கு
போதும் என்றீர்
பெலவீனத்தில் என் பெலன்
இருக்கும் என்றீர்
- என் பேரைசொல்லி